


24.12.2024

**தலைப்புச் செய்திகள்**

1. **புதுதில்லியில் நடைபெற்ற பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை கூட்டத்தில்** பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று பங்கேற்றார்.

2. **நுகர்வோரின் உரிமைகளை பாதுகாத்து அதிகாரம்** வழங்குவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளது என்று மத்திய நுகர்வோர் அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

3. **எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி** ராமேஸ்வரத்தை சேர்ந்த 17 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

4. **கோவை, மதுரை ஒருங்கிணைந்த மெட்ரோ ரயில்** திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு உள்ளதாக சென்னை மெட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

5. **வதோதராவில் வெஸ்ட் இண்டீஸுக்கு எதிரான 2-வது மகளிர்** ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

□□□□□□□□□

**பிரதமர் பட்ஜெட்**

பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில் பொருளாதார நிபுணர்களுடன் பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனைக் கூட்டத்தில் இன்று பங்கேற்றார்.

வரும் 2025-26-ம் நிதியாண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் இடம்பெறுவதற்கான முக்கிய துறை திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து பிரதமர் இதில் விவாதித்ததாக தெரிகிறது.

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் நித்தி ஆயோக் நிர்வாக இயக்குநர் பி.வி.ஆர். சுப்ரமணியம் மற்றும மூத்த அதிகாரிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

□□□□□□□□

**பிரதமர் தொடர்ச்சி**

**இதனிடையே பிரதமர் திரு. நரேந்திரமோடி** மத்திய பிரதேச மாநிலம்7 கஜுராஹோவில் முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் நூற்றாண்டு பிறந்தநாளை ஒட்டி நினைவு தபால்தலை மற்றும் நாணயத்தை நாளை வெளியிடுகிறார்.

கிராம பஞ்சாயத்துகளில் நல்லாட்சியை உறுதிசெய்யும் வகையில் சிறப்பான பணிகளை மேற்கொள்ள வழிகோலும் ஆயிரத்து 153 அடல் கிராம் நல் ஆளுமை கட்டிடங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

இதனிடையே வாஜ்பாயின் பிறந்த நாள் மற்றும் அரசியலமைப்பு சாசனத்தின் 75-வது ஆண்டை குறிக்கும வகையில் குஜராத்தில் எனது பாரதம் நல்லாட்சி பாதயாத்திரையை மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா இன்று தொடங்கி வைக்கிறார்.

□□□□□□□□

**தேசிய நுகர்வோர் தினம்**

**தேசிய நுகர்வோர் தினத்தை ஒட்டி மத்திய** நுகவோர் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு தொடர்பான பல்வேறு புதிய திட்டங்களை இன்று தொடங்கி வைத்தார்.

நுகர்வோரின் உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கு ஆளுமை வழங்குவதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

பாதுகாப்பான வெளிப்படை மற்றும் நம்பகத் தன்மையுடன் கூடிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கி முறையற்ற இணையதள வர்த்தக செயல்பாடுகளை களைய அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக குறிப்பிட்டார்.

மின்னணு வர்த்தக தள உரிமையாளர்கள், பங்குதாரர்கள், குடிமை அதிகாரிகள், ஒழுங்குமுறை ஆணையர்கள் உள்ளிட்டோர் இணைந்து நுகர்வோரின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் நேர்மையான செயல்பாடுகளை முன்னெடுத்துச்செல்ல அழைப்பு விடுத்துள்ளார்.

நுகர்வோருக்கு ஆளுமை வழங்கி குறைபாடுகளை கண்டறிந்து செயல்படுவதற்கான மின்னணு செயலியையும் அமைச்சர் அறிமுகம் செய்தார்.

1986-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்திற்கு குடியரசு தலைவர் ஒப்புதல் வழங்கி சட்டமாக இயற்றப்பட்டதை குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் இத்தினம் நுகர்வோர் தினமாக கொண்டாடப்படுகிறது.

நுகர்வோர் தினத்தின் முக்கியத்துவத்தை தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் ஆணைய உறுப்பினர் திரு. சங்கர் எடுத்துரைக்கையில்..

.. வாய்ஸ் ..

□□□□□□□□

**அஷ்விணி வைஷ்ணவ்**

**நாட்டில் நடப்பு நிதியாண்டின் முதல் எட்டு** மாதங்களில் ஸ்மார்ட் போன் ஏற்றுமதி ஒருலட்சம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாக மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தால் இது சாத்தியமானதாக தமது சமூக வலைதள பதிவில் அமைச்சர் கூறியுள்ளார்

நவீன கைபேசிகளின் ஏற்றுமதி நடப்பாண்டு ஒருலட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்

ஸ்மார்ட் போன் பிரிவில் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தால் நேரடியாகவும், மறைமுகமாகவும் 9 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் திரு. அஷ்விணி வைஷ்ணப் கூறினார்.

□□□□□□□□

**எஸ்.ஜெய்சங்கர்**

**மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர்** டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் 6 நாள் பயணமாக இன்று அமெரிக்கா செல்கிறார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சருடன் இருதரப்பு, பிராந்திய சர்வதேச பிரச்சனைகள் குறித்து அவர் விரிவாக விவாதிக்கிறார்.

இந்திய தூதரக அதிகாரிகளின் மாநாட்டிலும் டாக்டர் ஜெய்சங்கர் தலைமையுரையாற்றுகிறார்.

□□□□□□□□

**கிறிஸ்துமஸ்**

**கிறிஸ்துமஸ் பெருவிழா நாளை** கொண்டாடப் படுவதை ஒட்டி முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கிறிஸ்தவ மக்களுக்கு தமது உளம் கனிந்த கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டுள்ளார்.

துன்பம் செய்தவருக்கும் நன்மை செய்யும் அன்பை விதைத்த இயேசு பெருமானின் அன்பு மற்றும் அமைதிவழி தற்போதைய தேவையாக உள்ளது என்று தமது வாழ்த்து செய்தியில் முதலமைச்சர் கூறியுள்ளார்.

**அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி** கே. பழனிச்சாமி விடுத்துள்ள செய்தியில், உள்ளம் முழுவதும் மகிழ்ச்சி பொங்கிட உவகை பெருக்குடன் கிறிஸ்துமஸ் திருநாளை கொண்டாடும் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களை உரித்தாக்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

**இதனிடையே கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி** இன்று நாடுமுழுவதும் தேவாலயங்களில் நள்ளிரவு பிரார்த்தனைகள் நடைபெறவுள்ளன.

இயேசு பிரானின் பிறப்பை குறிக்கும் வகையில் இல்லங்களில் குடில் அலங்காரங்களோடு, ஒளி விளக்குகள் களை கட்டியுள்ள நிலையில், தென் மாவட்டங்களில் பிரம்மாண்ட கிறிஸ்துமஸ் அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன.

**கிறிஸ்துமஸ் விழா கோலாகலமாக கொண்டாடப்படும்** கன்னியாகுமரி மாவட்டத்தில் பாலப்பள்ளம் என்ற இடத்தில் அப்பகுதி இளைஞர்கள் பிரமிடு வடிவிலான பிரம்மாண்ட கிறிஸ்துமஸ் குடிலை வடிவமைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. **வாய்ஸ்** ..

கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி கேக் விற்பனையும் சூடு பிடித்துள்ளது.

மயிலாடுதுறையில் மக்கள் பல்வேறு உருவங்களில் வடிவமைக்கப்பட்ட விதவிதமான கேக்குகளை மக்கள் ஆர்வத்துடன் வாங்கி செல்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

□□□□□□□□

**மீனவர்கள்**

**எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி** ராமேஸ்வரத்தை சேர்ந்த 17 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

ராமேஸ்வரத்திலிருந்து 400-க்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் சென்ற மீனவர்களை தலைமன்னார் கடற்பகுதியில் கைது செய்து அங்குள்ள கடற்படை முகாமிற்கு விசாரணைக்காக அழைத்து சென்றுள்ளனர்.

□□□□□□□□□

**எம்.ஏ. சித்திக்**

கோவை மற்றும் மதுரைக்கான ஒருங்கிணைந்த மெட்ரோ ரயில் திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவன மேலாண் இயக்குநர் திரு. எம்.ஏ. சித்திக் கூறியுள்ளார்

கோவையில் மெட்ரோ ரயில் திட்டம் குறித்த ஆலோசனை கூட்டத்திற்கு பின்னர் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் 3 ஆண்டுகளில் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்றார்.

**.. வாய்ஸ் ..**

□□□□□□□□□

**தந்தை பெரியார்**

**தந்தை பெரியாரின் 51-வது நினைவு தினத்தை** ஒட்டி முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சென்னை அண்ணா சாலையில் உள்ள அன்னாரது திருவுருவ சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்த்தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து பெரியார் திடலில் அமைக்கப்பட்டுள்ள பெரியார் பகுத்தறிவு எணினி நூலகம் மற்றும் ஆய்வு மையத்தை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

□□□□□□□□□

**எம்.ஜி. ராமச்சந்திரன்**

**தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.** ராமச்சந்திரனின் 37-வது நினைவு தினத்தை ஒட்டி சென்னை மெரினாவில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி இன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

நாமக்கல், திருவாரூர் உட்பட மாநிலத்தின் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு அஇஅதிமுக-வினர் மலரஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

□□□□□□□□□

உதயநிதி

**கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை** வெள்ளி விழாவை முன்னிட்டு சென்னை போக்குவரத்து மத்திய பணிமனையில் அரசு போக்குவரத்துக் கழக விரைவு பேருந்துகளின் சேவையைப் துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இன்று துவக்கி வைத்து இலட்சிணையை வெளியிட்டார்

□□□□□□□□

**கே.ஆர்.பெரியகருப்பன்**

**தமிழ்நாடு கல்வியில் சிறந்த மாநிலமாக** திகழ்கிறது என்று மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. **மு.சு.**பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் கோட்டை இருப்பு கிராம ஊராட்சி தொடக்கப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள 2 புதிய வகுப்பறை கட்டிடங்கள் உட்பட 2 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை இன்று துவக்கி வைத்து பேசியஅவர், கல்வித்துறையின் மேம்பாட்டிற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

கிராமங்களின் அத்தியாவசிய தேவைகளை கண்டறிந்து அரசு நிறைவேற்றி வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

முன்னதாக திருவுடையார் பட்டி பையூர் பகுதிகளில் புதிய நியாயநிலைக் கடைளையும், சுண்டக்காடு, குமாரப்பேட்டை, செவ்வூர் கிராமங்களில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடங்களையும் அமைச்சர் திறந்து வைத்தார்.

□□□□□□□□

**நீலகிரி**

**நீலகிரி மாவட்டம் உதகையில் ஒருமாதத்திற்கு பின்** இன்று அதிகாலை உறைபனி காணப்பட்டு கடும் குளிர் நிலவுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

**.. வாய்ஸ் ..**

□□□□□□□□

**அன்புமணி**

வன்னியர்களுக்கு 10.5 சதவீத உள் இடஒதுக்கீடு கோரி காஞ்சிபுரத்தில் பாமக தலைவர் டாக்டர்.அன்புமணி ராமதாஸ் தலைமையில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

500க்கும் மேற்பட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

□□□□□□□□

**இருவரி**

தமிழ் ஆட்சிமொழி சட்டவாரத்தை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்டத்தில் விழிப்புணர்வு பேரணியை **ஆட்சித்தலைவர் திருமதி.கிரேஸ்பச்சாவ்** இன்று துவக்கி வைத்தார்.

300க்கும் மேற்பட்ட பள்ளி மாணாக்கர் இதில் கலந்துகொண்டு, தமிழ் மொழியின் பெருமை குறித்து விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திச்சென்றனர்.

**திருப்பத்தூர்** மாவட்டத்தில் மதுவிலக்கு வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் வரும் 30ம் தேதி பொது ஏலம் விடப்பட உள்ளதாக, மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

**நாமக்கல்** மாவட்டத்தில் மழை வெள்ள பாதிப்புகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு பெறப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில், 41 **லட்சம் ரூபாய்** மதிப்பீட்டில், 2 புதிய பணிகள் உடனடியாக மேற்கொள்ள **ஆட்சித்தலைவர் டாக்டர்.உமா** உத்தரவிட்டுள்ளார்.

□□□□□□□□

**வானிலை**

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப்பகுதி, **அடுத்த 24 மணி நேரத்தில்** அதே பகுதியில் வலுவிழக்கக் கூடும் என்று, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, வடதமிழக கடலோர மாவட்டங்களின் ஒருசில இடங்களில், இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

தெற்கு ஆந்திர கடலோர பகுதிகள், மத்திய மேற்கு வங்ககடல் பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால், இன்றும் நாளையும் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

□□□□□□□□□

**கிரிக்கெட்**

வதோதராவில், வெஸ்ட் இண்டிசுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் மகளிர் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்யும் இந்தியா, சற்றுமுன் 5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 35 ரன் எடுத்துள்ளது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

□□□□□□□□□

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**